







# தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்


பதிப்பாசிரியர்

முனைவர் கா. ஸ்ரீதர்
முனைவர் சு. தங்கமாரி
முனைவர் செ. துர்காதேவி
பேரா. இரா. அன்னலட்சுமி
பேரா. செ. சாந்தி
பேரா. சோ. ஹரிபாண்டிராஜன்
முனைவர் வீ.ச. அசோக்குமார்
பேரா. சி. அம்சவள்ளி



Estd : 1947

வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)

விருதுநகர்

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல்தலைப்பு | : | தமிழ் இலக்கியங்களில் வழி(பன்னாட்டு ஆய்வுக்கருத்தர 18 ஆகஸ்ட் 2017 |
| முதல்பதிப்பு | : | ஆகஸ்ட், 2017 |
| பதிப்புரிமை மற்றும் வெளியீடு | : | **வி.இ.நா.செந்திக்குமார நாடா கல்லூரி,** (தன்னாட்சி), விருது |
| மின்னஞ்சல் | : | Support @Vhnsnc.edu.in |
| வலைதளம் | : | www.vhnsnc.edu.in |
| ISBN No | : | 978 - 93 - 81723 - 74 - 6 |
| புத்தக அளவு | : | 5.83 x 8.27 |
| பக்கங்கள் | : | 533+13 பக்கங்கள் |
| விலை | : | ரூ.400/- |
| அச்சிட்டோர் | : | லேசர் பாயிண்ட், வசந்த நகர் முதன்மைச் சாலை, மதுரை-3 |
| அட்டைப் படம் | : | Sree Graphics - 9003317131 Virudhu Nagar. |


இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைக் கருத்துகளுக்கு அந்தந்தக் கட்டுரையாளர்களே முழுப் பொறுப்பாவார்கள்.

# பொருளடக்கம்


| எண். | பெயர் மற்றும் கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01 | **அகல்யா.மு**<br>சங்க காலமும் பெருந்தெய்வமும் | 01 |
| 02 | **அசோக்குமார்.சு**<br>பாலைத்திணைப் பாடல்களில் நடுகல் வழிபாடு | 06 |
| 03 | **அசோக்குமார் வீ.ச.**<br>வேள்வி – தடயங்களும் தருக்கங்களும் | 11 |
| 04 | **அம்சவள்ளி.சி**<br>அருள்மிகு போத்தி மகாராசா கோயில் வழிபாடு | 19 |
| 05 | **அமுதன், சா**<br>அச்சமூட்டும் அணங்குகள் | 25 |
| 06 | **அருணாதேவி,**<br>திருமுருகாற்றுப்படையில் வழிபாடுகள் | 30 |
| 07 | **அருள் செல்வி. சி**<br>தமிழ் இலக்கியங்களில் பெருந்தெய்வ (சிவன்) வழிபாடு | 37 |
| 08 | **அன்புராணி,செ**<br>வருண வழிபாடு | 41 |
| 09 | **அன்னலட்சுமி. இரா**<br>கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தவகால வழிபாடு | 48 |
| 10 | **இந்திரா. ப.**<br>**இராசராச சோழனின் இறைப்பணி** | 53 |
| 11 | **இரவிச்சந்திரன. இரா.**<br>தோடர்களின் வழிபாடுகளும் நம்பிக்கைகளும் | 59 |
| 12 | **இராகப்பிரியா.வெ.**<br>திருமுருகாற்றுப்படையில் பின்பற்றப்படும் வழிபாட்டு முறைகள் | 64 |
| 13 | **இராணி.க.கு**<br>சிவப்பிரகாசத்தில் குரு வழிபாடு | 70 |




Scanned with CamScanner

# 8.வருண வழிபாடு

**முனைவர் செ.அன்புராணி**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
பாத்திமா கல்லூரி மதுரை

**முன்னுரை**

தமிழின் தொன்மையான இலக்கணமான தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியலில் ஐவகை நிலங்களின் தெய்வங்களைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. நிலத்தை அதன் இயல்புக்கு ஏற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்து, ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஒரு தெய்வத்தை அமைத்து மக்கள் வழிபட்டனர். அவை திணை தெய்வங்கள் என அழைக்கப்பட்டன. மலை நாட்டவரான குறிஞ்சி நிலத்தவர் சேயோனையும், காட்டு நாட்டவரான முல்லை நிலத்தவர் மாயோனையும், வயல் நாட்டவரான மருத நிலத்தவர் வேந்தனையும், கடல் நாட்டவரான நெய்தல் நிலத்தவர் வருணனையும் வழிபட்டனர் என்பதை தொல்காப்பியத்தால் அறியமுடிகிறது. வளமற்ற பாலை நிலத்தவர் கொற்றவையை வழிபட்டனர் என்பதையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். பிற்கால உரையாசிரியர்கள் சேயோனை முருகன் எனவும், வேந்தனை இந்திரன் எனவும், மாயோனை திருமால் எனவும் குறிப்பிட்டனர். ஆனால் வருணனை வேறு பெயரிட்டு அவர்கள் அழைக்கவில்லை. கடலைத் தமது வாழ்க்கைக் களமாகக் கொண்டு கடற்கரையில் வாழ்கின்ற பட்டினத்தவரும், கடல் வாணிகம் செய்வோரும் பண்டைக் காலத்தில் வருணனைத் தமது வழிபாட்டுக் கடவுளாகக் கொண்டிருந்தனர். இக்கட்டுரை வருணனைப் பற்றியும், வருண வழிபாடு பற்றியும் ஆராய்வதாக அமைகின்றது.

**ரிக் வேதத்திலும், தொல்காப்பியத்திலும் வருணன்**

ரிக், யஜீர், சாம, அதர்வண வேதங்களுள் ரிக் வேதம் மிகப் பழமையானது என்பர். ரிக் வேதத்தில் வருணன் மிக முக்கியமான கடவுளாகக் குறிப்பிடப்படுகிறார். உலகம் ஒரு சட்ட நியதிக்குள் இயங்க உதவுபவராக வருணன் சித்திரிக்கப்பட்டுள்ளார். மேலும் கடல், நீர்நிலைகள், மழை